**சுற்றறிக்கை எண். 114860/ ட்டி2 /2024, நாள்: 28.08.2024**

**தட்டச்சு தேர்வு எழுதும் தேர்வர்கள் மற்றும் தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளர்கள் கவனத்திற்கு.**

பொருள்: தேர்வுப்பிரிவு – தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் –ஆகஸ்ட் 2024 அரசு வணிகவியல் தேர்வு 31.08.2024 மற்றும் 01.09.2024 ஆகிய தேதிகளில் – தட்டச்சு தேர்வுகளில் – பிற தேர்வின் நிமித்தம் – அணி மாற்றம் செய்தல் – தொடர்பாக.

*************

இத்துறையின் மூலம் வருடத்திற்கு இரண்டு முறை அரசு வணிகவியல் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. 31.08.2024 மற்றும் 01.09.2024 ஆகிய தேதிகளில் நடைபெறவிருக்கும் தட்டச்சு தேர்விற்கு, விண்ணப்பத் திருத்தத்திற்காக வாய்ப்பு வழங்கப்பட்ட 22.07.2024 தேதிக்கு பின்பு அறிவிக்கப்பட்ட நேர்காணல்கள் மற்றும் தேர்வுகளை மேற்கொள்ளும் தேர்வர்கள் இரண்டிலும் கலந்து கொள்ள ஏதுவாக உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தேர்வு மையங்களில் கட்டணம் ஏதும் செலுத்தாமல் 29.08.2024 மற்றும் 30.08.2024 ஆகிய தேதிகளில் காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணிக்குள் தங்களது அணி மாற்றத்தை செய்து கொள்ளலாம்.

மேலும், 22.07.2024 தேதிக்கு முன் அறிவிக்கப்பட்ட நேர்காணல்கள் மற்றும் தேர்வுகளை மேற்கொள்ளும் தேர்வர்கள் தேர்வு அணி மாற்றம் தேவைப்பட்டால் 5 மடங்கு அபராதத் தொகையினை வங்கி வரைவோலை The Additional Director of Technical Education (Exams), Chennai என்ற பெயரில் எடுத்து தேர்வு மையத்தில் விண்ணப்பித்து அணி மாற்றம் செய்து கொள்ளலாம். தட்டச்சு இயந்திர எண் மாற்றம் செய்ய, கட்டணம் ஏதும் செலுத்தாமல் 29.08.2024 மற்றும் 30.08.2024 ஆகிய தேதிகளில் தேர்வு மையங்களில் மாற்றிக் கொள்ளலாம். தேர்வு நடைபெறும் போது பழுது ஏற்பட்டால் கட்டணம் ஏதும் செலுத்தாமல் தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளரிடம் கடிதம் சமர்ப்பித்து தட்டச்சு இயந்திரத்தை மாற்றிக் கொள்ளலாம். இது தவிர வேறு ஏதும் விண்ணப்பப்பிழை மாற்றத்திற்கு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் 5 மடங்கு கட்டணம் செலுத்தி 30.08.2024 மாலை 04.00 மணிக்குள் மாற்றிக் கொள்ளலாம்.

30.08.2024 மாலை 04.00 மணிக்குப் பின் தேர்வுப் பணி காரணமாக தேர்வு மையங்களிலும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திலும் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/– த. ஆபிரகாம் இ.ஆ.ப.**
**தேர்வு வாரியத் தலைவர்**

**// ஆணைப்படி அனுப்பலாகிறது //**

28/08/24

**வட்டார அலுவலர் – II**